ORIGINAL ARTICLE

# தமிழர் வழிபாட்டுச் சடங்குகள்
# [TAMIḺAR VAḺIPĀṬṬUC CAṬAṄKUKAḶ]

## RITUALS OF TAMILS IN WORSHIPING

**நீ.காஞ்சனா / N.Kanchana *[1]**

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: nkanchana36@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/169

**Abstract**

This article is about the rituals of Tamils in worshiping. Rituals have appeared since the human was born. This article seeks to understand how such emerging rituals are intertwined in the lives of Tamil. The ancient Tamil people practiced many land-based deities. Such as Aṇaṅku, cūr, cūrara makaḷir, nīraṭi makaḷir, varaiyara makaḷir, and koṟṟavai are worshipped. The objective of this paper is to prove that certain rituals are performed in order to fulfill religious duties. The study involved library research and was followed by explanatory analysis. A few rituals are performed for the spiritual and emotional satisfaction of the performer. There are various rituals associated with human life. This study has shown that rituals from birth to death are related to people's lives. Findings and the implementation of this research emphasizes that man and his society embody the moral rituals that are created to regulate life.

**Keywords**: Birth rituals - Marriage rituals - Mountain deity - Rain rituals - Vaelen frenzy – Tombstone worship.

**ஆய்வுச் சாரம்**

இக்கட்டுரையானது, மனிதன் தோன்றிய காலந்தொட்டே சடங்குகளும் தோன்றிவிட்டன. அவ்வாறு தோன்றிய சடங்குகள் எவ்வாறு தமிழர்களின் வாழ்வில் இணைந்துள்ளது என்பதைப்பற்றி அறிய முற்படுகிறது. சங்ககாலத் தமிழ் மக்கள் நிலம் சார்ந்து பல தெய்வ வழிபாட்டை முன்னெடுத்துள்ளனர். அணங்கு, சூர், சூரர மகளிர், நீரடி மகளிர், வரையர மகளிர், கொற்றவை முதலான தெய்வங்களை வணங்கியிருக்கின்றனர் போன்ற செய்திகள் நமக்குக் காணக்கிடைக்கின்றன. சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காகச் சில சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன என்ற நோக்கத்தை மையமாக கொண்டு ஆராயப்படுகிறது. இவ்வாய்வு கட்டுரையானது நூலக ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. விளக்கமுறை அணுகுமுறையைக் கையாண்டுள்ளது. சடங்கு செய்பவரின் ஆன்மீகம் மற்றும் உணர்வுபூர்வமான மனநிறைவுக்காகச் சில சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. மனிதரின் வாழ்வோடு தொடர்புடைய பல்வேறு சடங்குகள் உள்ளன. பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சடங்குகள் மக்களுடைய வாழ்வியலோடு

தொடர்புள்ளவை என்பவை ஆய்வுக்கண்டுபிடிப்புகளாக காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வு கட்டுரையின் மூலம் மனிதனும் அவனைச் சார்ந்த சமூகமும் வாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கமாகச் சடங்குகள் திகழ்கின்றன என்பதை வலியுறுத்திச் செல்கிறது.

**கருச்சொற்கள்:** பிறப்புச் சடங்குகள், திருமணச் சடங்குகள், மலைத்தெய்வம், மழைச்சடங்குகள், வேலன் வெறியாட்டு, நடுகல் வழிபாடு.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd June 2021, revised 15th July 2021, accepted 30th July 2021

**முன்னுரை**

சங்ககாலத் தமிழ் மக்கள் நிலம் சார்ந்து பல தெய்வ வழிபாட்டை முன்னெடுத்துள்ளனர். அணங்கு, சூர், சூரர மகளிர், நீரடி மகளிர், வரையர மகளிர், கொற்றவை முதலான தெய்வங்களை வணங்கியிருக்கின்றனர். உருவமற்ற இவை அச்சம் தரும் சிறு தெய்வங்களாகும் (Povas, 1980)[1]. இத்தகைய தெய்வம் நீர்நிலைகளிலும் மரங்களிலும் மலைக்குவடுகளிலும் உறைவதாக மக்கள் நம்பினர். இத்தெய்வத்தின் மீதான அச்ச உணர்வே இவர்களின் வழிபாட்டுக்கான காரணமாக அமைந்தது (Vaiyapuri Pillai, 1982)[2]. வழிபாட்டு முறைகளுக்கு ஏற்ப சடங்குகளும் வெவ்வேறாக அமைந்திருந்ததைச் சங்கப் பாடல்கள் வழி எடுத்துரைப்பதாக இந்த ஆய்வு அமைகிறது.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே சடங்குகளும் தோன்றிவிட்டன. ஏனெனில் சடங்கானது மனித மனத்தின் வெளிப்பாடாகும். ஆதிகால இனக்குழுச் சமூகத்தில் வேட்டைக்குச் செல்லும்முன் வேட்டைச் சடங்கு நிகழ்த்தியதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. இயற்கையால் நன்மை அடைந்தபோது நன்றி செலுத்தும் பொருட்டும் இயற்கையால் பாதிப்படைந்தபொழுது இயற்கையை நிறைவுபெறச் செய்யவும் நம்பிக்கையின் அடிப்படையில் சில சடங்குகளை மேற்கொண்டான். மனிதனால் குறியீட்டு நிலையில் நிகழ்த்தபட்ட இத்தகைய சடங்குகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு நிலைத்த வடிவம் பெற்றன.

வழிபாடும் பிரார்த்தனையும் உலகியல் தன்மை வாய்ந்தன என்கிறது கலைக்களஞ்சியம். வழிபாடு என்பதற்கு வழிபடு, வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், வழக்கம், சமயக் கோட்பாடு எனச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகிறது.

> **“**உள்ளம் பெருங்கோயில்**,** ஊன் உடம்பு ஆலயம்**,**
> வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**,**
> தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கு**”**

என்கிற திருமூலரின் திருமந்திரத்தில் உள்ளமே கோயில் எனக் கூறுவதையும் ஈண்டு நினைக்கற்பாலது (Thirumoolar, 2006)[3].

**பிறப்புச் சடங்குகள்**

சங்ககால மக்களின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. நம்பிக்கைகளும் சடங்குகளும் இவர்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகத் திகழ்ந்தது. குழந்தைச் செல்வம் மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்” (Thiruvalluvar, 1984)[4].

என்ற குறட்பாவும்,

**’**படைப்பு பல படைத்து**’**

எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலடிகளும் குழந்தைப்பேற்றின் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ளது.

“குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்”

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் கடவுளைப் பேணிக் குறவன் ஒருவன் பெண்மகவு ஈன்றமை பற்றிக் கூறுகின்றது **(**Subramanian, 2014)[5].

குழந்தை கருவுற்ற காலத்திலேயே பெண்கள் குழந்தை நலனுக்காக வழிபாட்டுச் சடங்குகளில் ஈடுபட்டுள்ளனர். சூல் கொண்ட மகளிர் தேவராட்டியுடன் நின்று மடை கொடுத்தல் மரபாகக் காணப்படுகிறது. இதனை,

“ஒண்சுடர் விளக்கம் முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல இயலி
கடுஞ்சூல் மகளிர் பேணி கைதொழுது” (Subramanian, 2014)[5]

என்னும் மதுரைக்காஞ்சியின் பாடலடிகள் சுட்டிக் காட்டுகின்றன. மகப்பெற்ற மகளிர் அணங்கு முதலியன அண்டாத வகையில் குழந்தையைக் காப்பாற்ற நெய்யுடனே வெண்சிறு கடுகை மாளிகையிடத்தே பூசி வைத்துள்ளனர். நறும்புகையும் புகைத்திருக்கின்றனர். குழந்தைக்கு மை தீட்டியும் பாதுகாத்துள்ளனர். இதனை,

“புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர் - இமை பொருந்த” (Subramanian, 2014)[5]
“கடும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி
நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்கு நகர் விளங்கக் கிடந்தோட் குறுகி
புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து” (Subramanian, 2014)[5]

என்னும் நற்றிணைப் பாடல்களின் வழி அறிய முடிகிறது.

குழந்தைபெற்ற தாய், தீட்டுடையவளாகக் கருதப்பட்டாள். குறித்த நாட்களுக்குப் பிறகு அத்தீட்டு (புலவுப் புனிறு) தீர்ந்து, சுற்றமொடு குளத்தில் நீராடி வருதலை,

“புலவுப்புனிறு தீர்ந்து பொலிந்த சுற்றமொடு வளமனை மகளிர்
குளநீர் அயர” (Subramanian, 2014)[5].

எனும் பாடலடிகள் சுட்டிக் காட்டுகின்றன. இதன் வழியாகப் பெண் கருவுற்ற காலம் தொடங்கி அக்குழந்தையை வளர்த்து ஆளாக்குகின்ற வரையிலும் பல சடங்குகளை மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுகிறது. இத்தகைய சடங்குகள் ஒவ்வொரு நிலம்

சார்ந்தும் வேறுபட்ட தன்மையில் அமைந்திருந்தன என்பதையும் சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

## திருமணச் சடங்குகள்

பருவம் அடைந்த தலைவனும் தலைவியும் தம்முள் கலந்து பழகி நட்பு கொண்டு ஒழுகும் ஒழுகலாற்றைக் களவு என்றழைத்தனர். களவு வெளிப்பட்டுவிட்டால் கற்பு நிலையை எய்துதல் வேண்டும். திருமணத்திற்கு வரைதல் என்ற பெயருமுண்டு. வரைதல் என்றால் வரையறுத்துக் கொள்ளுதல். மணவாழ்வினையே தொல்காப்பியர் கற்பு என்கிறார். இதனை, கற்பெனப்படுவது கரணமொடு புணரக், கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" என்ற நூற்பாவின் வழி அறியலாம் (Tholkappiyar, 1942)[5].

சங்க காலத்தில் தமிழர்களின் திருமணச் சடங்குகள் எத்தகைய முறையில் அமைந்திருந்தன என்பதை விளக்குவதாக அகநானூற்றின் 86, 136 ஆகிய இரு பாடல்களும் அமைந்துள்ளன.

'உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை, பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்' என்ற அகநானூற்றுப் பாடலில் வைகறைப்பொழுதில் திங்களும் உரோகிணியும் கூடிய நல்ல நாளில் திருமணம் நிகழ்ந்தது (Subramanian, 2014)[5]. பந்தலமைத்துப் புதுமணல் பரப்பினர். விளக்குகளை ஏற்றினர். மாலைகளைத் தொங்கவிட்டு இல்லத்தை அழகுபடுத்தினர். முதுமகளிர் மணமகளை நீராட்ட நீர்க்குடங்கள் ஏந்தி வந்தனர். மலரும் நெல்லும் தூவிப் குழந்தைகளைப் பெற்ற பெண்கள் நால்வர் மணமகளைக் கற்பு நெறியினின்றும் வழாமல் நலம்பல ஆற்றிக் கணவன் விரும்பத்தக்க மனைவி ஆகுக என வாழ்த்தி நீராட்டினர் என்பதை அறிய முடிகிறது.

'மைபுபுறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு, வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி' என்ற அகநானூற்றுப் பாடலில் இறைச்சியைக் கலந்து ஆக்கப்பெற்ற வெண்சோற்று விருந்து நடைபெற்றது (Subramanian, 2014)[5]. மணமுழவும் முரசும் முழங்கின. வெண்ணூலில் வாழை இலையையும் அருகம் புல்லையும் சேர்த்துக் கட்டி காப்பாகப் பெண்ணுக்கு அணிவித்ததையும் தூய உடை உடுத்தியதையும் அறியலாம்.

## மலைத்தெய்வம்

சங்க காலத்தில் சூர், அணங்கு, முருகு போன்ற தெய்வங்கள் மலை சார்ந்த நிலப்பகுதியில் இருந்ததாக நம்பிக்கை நிலவியது. அணங்கு, வரையர் மகளிர், சூர் போன்ற பேராற்றல்கள் குறிப்பாகப் பெண்களைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்குக் கேடு செய்கின்றனவாகக் கருதப்பட்டன. அச்சம், வருத்தம் என்று பொருள் தருகின்ற வகையில் அணங்கு, பேய், சூர் போன்ற பெயர்களால் கடவுள் குறிக்கப்பட்டாலும் அவற்றின் பேராற்றல் காரணமாக வணங்கப்பட்டன. மனிதனுக்கு நன்மை செய்யும் பேராற்றலைவிட, கெடுதல் செய்யும் பேராற்றல் பற்றிய சிந்தனைதான் முதன்முதலாகச் சடங்குகள் செய்யத் தூண்டின. அணங்கின் இயல்பைப் பற்றி, 'கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக்காரிகை காண்மின், தாக்கு அணங்கு ஆவது எவன்கொல் அன்னாய்' என்னும் பாடலடிகள் உணர்த்தும் (Subramanian, 2014)[5]. தாக்கு

அணங்கு என்னும் கடவுள் தம்மை எதிரில் வருகின்றவர்களைத் தாக்கும் அதிலும் இளம் பெண்களைப் பற்றித் துன்புறுத்தும் (Subramanian, 2014)[5].

அணங்கைப் போலவே அச்சம் தருகின்ற இன்னொரு கடவுள் சூர். சூர்மகள் என்பதையே சூர் எனக் குறிப்பிடுகின்றனர். சூரானது மலைச்சுனை, மலைத்தொடர் போன்ற மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் உறைந்திருந்தது. சூர் குடியிருக்கும் மலையில் முளைத்துள்ள தழையினைத் தீண்டினாலும் வாடச்செய்தாலும் அது அவர்களை வருத்தும். அதனால் வரையாடுகள் கூட சூர் உறைந்திடும் மலையிலுள்ள தழையினை உண்ணவில்லை என்பதை, 'வாடல் கொல்லோ தாமே அவன்மலைப், போருடை வருடையும் பாயா, சூருடை அடுக்கத்த கொயற்கு அருந்தழையே?' என்ற நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது (Subramanian, 2014)[5]. சூர் கடவுளினால் பற்றப்பட்ட விலங்குகளும் நடுக்கம் அடைகின்ற நிலையை, 'சூர் உறு மஞ்ஞையின் நடுங்குக' என்ற குறிஞ்சிப்பாட்டின் பாடலடி தெளிவுறுத்துகிறது (Subramanian, 2014)[5].

மலையில் வாழும் கடவுளான அணங்கினுக்குக் குன்றவர் தமது சுற்றத்தினருடன் கூடி படையலிட்டு வழிபட்டனர். பழுத்த மாங்கனிகள், பலாச்சுனைகள், தேன், மூங்கிலில் தயாரிக்கப்பட்ட கள் போன்றவற்றை அணங்கினுக்குப் படைத்துவிட்டுப் பின்னர் அவற்றை உண்டு மயங்குகின்றனர். 'தேன் தேர் சுவைய, திரள் அரை மா அத்து, கோடைக்கு ஊழ்த்த, கமழ் நறுந்சிதிம் கனி, பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுனை அளைஇ, இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல், அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி' என்ற அகநானூற்றுப் பாடல் குறவர்கள், மலையில் உறைந்திருக்கும் கடவுளைத் தம்முடைய பெண்களுடன் வழிபட்ட காட்சியை அறிய முடிகிறது (Subramanian, 2014)[5].

**மழைச்சடங்கு**

இனக்குழு மக்கள் அனைவரும் கலந்து கொண்டு மழைச் சடங்கு செய்ததைப் புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. குறவர் மக்கள் வானம் மழைபொழியவேண்டும் என்று தினைப்பலி தூவ மழைபொழிந்தது. பின்னர் அதனை நிறுத்த மேகம் மேலே செல்க எனக் கட்டளை இட்டனர். மழை நின்றது இவ்வாறு சடங்கின்போது ஒன்றைச் செய்யவும் நிறுத்தி வைக்கவும் கட்டளையிடுவதும் பாவனைச் சடங்குடன் இணைத்தது மந்திரச் சடங்கின் வளர்ச்சியாகும். இதனை, 'மலைவான் கொள்க; என உயிர்பலி தூவ, மாரியான்று மழை மேக்கு உயர்க எனக் , கடவுட் பேணிய குறவர் மாக்கள், பெயல்கண் மாறிய உவகையர்' என்ற புறநானூற்றுப் பாடல் தெளிவுறுத்துகிறது (Subramanian, 2014)[5].

**வேலன் வெறியாட்டு**

அச்சந்தரும் கடவுள்களிலிருந்து சற்று மாறுபட்டதாக முருகு என்னும் கடவுள் கருதப்பட்டது. முருகன், நெடுவேள், சேய் போன்ற பெயர்களால் குறிக்கப்பட்டது. நிலத்திற்கு ஒரு தெய்வமாக வகைப்படுத்திய தொல்காப்பியர் குறிஞ்சிக்கு முருகனைத் தெய்வமாகக் கூறியுள்ளார். இதனை, 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்னும் நூற்பா குறிப்பிடுகிறது (Tholkappiyar, 1942)[6].

நிலத்தெய்வங்களை மட்டுமல்லாது பிற தெய்வங்களையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனை, 'பால்வரை தெய்வம் வினையே பூதம், ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்' என்னும் நூற்பா தெளிவுறுத்தும் (Tholkappiyar, 1942)[6].

மலைப்பகுதியில் ஐவனம், தினை முதலிய பயிர்களைப் பயிரிட்டு வாழ்ந்து வந்த குறவர்கள் முருகனை வழிபட்டனர். முருகனை வழிபட்டும் அவனுடைய வடிவத்தை மேற்கொண்டும் வேலொடு இருக்கின்றவனை வேலன் என்று அழைக்கப்பெற்றான். அவனைக் கொண்டு முருகனுக்கு வழிபாடு செய்வித்தல் வெறியாட்டு என அழைக்கப்பெற்றது. வெறியாட்டுக்கென்று ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அதனைத் தூய்மை செய்து நெல்லும் பொறியும் தூவி வேல் நடுவர். பின்னர் வேலுக்கு மாலை சூட்டிப் படையல் பொருளாகக் குருதி கலந்த தினைமாவினைப் படைப்பர். வேலன் முருகனுடைய மாலையினையும் அவனுடைய களிற்றையும் பாடி ஆடுவான். இவ்வாறு வேலன் ஆடுவதால் மக்களும் அவனோடு சேர்ந்து ஆடிப்பாடுவர். இதனை,

> **"**படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
> நெடுவேல் பேணத் தனிகிவன் இவளென
> முதுவாய்ப் பெண்டிர் அதுவாய்க் கூற
> களநன் கிழைத்துக் கண்ணி சூடி
> வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
> உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
> முருகாற்றுப் படுத்த உருகெடு நடுநாள்**"**

என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடும் (Subramanian, 2014)[5].

## நடுகல் வழிபாடு

வீரரின் நினைவாக நடப்பட்ட நடுகல்லை வழிபடுவது சங்ககாலத்தில் வழக்கத்தில் இருந்தது. நடுகல்லை நன்னீர் கொண்டு நீராட்டுதல், அதன்மேல் மஞ்சளைப் பூசுதல், மயிற்பீலி சூட்டுதல், பூக்களால் கட்டப்பட்ட மாலையினைச் சூட்டுதல், கள் வைத்து வணங்குதல், நறுமணத் தூபம் காட்டுதல், ஆட்டு ரத்தம் பலியாகத் தந்து வழிபடல் போன்றவை நடுகல் வழிபாட்டில் இடம்பெற்றன. வீரரின் நினைவாக நடப்பட்ட நடுகல்லில் கடவுள் உறைவதான நம்பிக்கை காலப்போக்கில் ஏற்பட்டது. இத்தகைய நடுகல் வழிபாடுதான் பின்னர் குலதெய்வம் உருவானதற்கான அடிப்படையாக விளங்கியது.

வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற்கள் வரிசையாக அமைந்துள்ளன. அதற்கு மயிற்பீலி சாற்றி, துணியால் பந்தல் அமைத்துள்ளனர் என்பதை, காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் எனத் தொல்காப்பியமும், அவன் பெயர்கல் மிசைப் பொறித்து, கவின் பெறக் கல்நாட்டின்று (Tholkapiyar, 1942)[6].

நடுகற்கள் கி. பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன (Thiruganasampantham, 2010)[7]. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கிடைக்கும் நடுகற்கள் இந்திய மக்களின் வீரதீரச் செயல்களையும் மகளிர் மாண்புகளையும் பண்பாட்டினையும் அறிந்து கொள்ள உதவுகின்றன என்று கூறும் மனோன்மணி அவர்களின் கருத்தும் ஈண்டு கருதத்தக்கது (Manonmani, 2013)[8].

நிரைமீட்டுத் தந்த கரந்தை வீரனை நன்றிக்கு அறிகுறியாகக் கோவலர் தொழுதனர். அவ்வீரனை, 'கன்றொடு , கறவை தந்து பகைவரோட்டிய, நெடுந்தகை' எனப் புறப்பாடல் புகழ்கிறது (Subramanian, 2014)[5]. அவ்வீரனுக்குக் கோவலர் வேங்கைப் பூவைப் பனையோலையாலேயே தொடுத்துத் தழைவிரவிக் கட்டிய மாலை சூட்டி வழிபாடு செய்கின்றனர். இதனை, 'ஓங்குநிலை வேங்கை யொள்ளினர் நறுவீப்,போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப் பல்லான் கோவலர் படலை சூட்டக் கல்லாயினையே' என்னும் அடிகள் உணர்த்தும் (Subramanian, 2014)[5].

நிரை காத்துக் கல்லானவனுக்கு நீராட்டி, மஞ்சள் பூசி அத்திப்பட்டை நாரினால் சிவந்த கரந்தைப் பூவைத் தொடுத்து மாலை அணிவித்ததை உணர்த்துகிறது (Ponniah & Thamburaj, 2017)[9].

நடுகல்லுக்கு விடியற்காலத்துப் பலியைப் படைத்து நீராட்டி நெய்விளக்கேற்றி நாள்தோறும் பூக்கள் தூவி வழிபடுவர். இதனை, 'புடைநடு கல்லி னாட்பலி யூட்டி, நன்னீ ராட்டி நெய்நறைக் கொளீஇய, மங்கன் மாப்புகை மறுகுடன் கமழும், நெடுநிலை நடுகல் நாட்பலி' என்னும் அடிகள் உணர்த்தும் **(**Subramanian, 2014)[5].

**முடிவுரை**

சமயம், மதம் என்னும் சொற்கள் சங்க இலக்கியத்தில் வழங்கப்படவில்லை என்றாலும் இச்சொற்களால் குறிக்கப்படும் உணர்வுகளும் வாழ்வு நெறிகளும் அக்காலத்தில் இருந்தன. மக்கள் வாழ்க்கையின் பயன்பாடுகளை உணர்ந்து தம்மைத்தாமே செம்மைப்படுத்திக் கொள்ள இறைநெறியினைப் பின்பற்றியுள்ளனர். இறைவனோடு தொடர்புடையவற்றைச் சமயம் எனக் குறித்தனர்.

சங்ககால மக்கள் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க கடவுளைப் பேணி வழிப்பட்டதையும் சூல் முற்றி வளரும் அக்குழந்தை நலமுடன் பிறக்கவேண்டிச் சடங்குகள் நிகழ்த்தியதையும் குழந்தை பிறந்தபிறகு அக்குழந்தையை அணங்கு முதலானவை நெருங்காத வகையில் வெண்சிறு கடுகையும் நெய்யையும் பூசிக் காத்தனர் என்பதையும் அறியமுடிகிறது (Swayam Bagaria, 2021)[10]. திருமண நிகழ்ச்சிகளில் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்பட்டதையும் பலபேறுகளையும் பெற்று மணமக்கள் வாழவேண்டும் என வாழ்த்தியதையும் காண இயலுகின்றது (Agilan & Varatharajan, 2021)[11]. மலையில் உறைவதாக நம்பிய தெய்வங்கள் பலவும் அச்சத்தைத் தரக்கூடியனவாகவே இருந்தன என்பதும் இதற்கு மாற்றாக வேலன் இருந்திருக்கின்றான் என்பதும் அவன்பொருட்டு பல வழிபாட்டுச் சடங்குகள் நிகழ்த்தியிருக்கின்றனர் என்பதும் பெறப்படுகின்றது (Kinnunen, Honkanen & Luonila, 2021)[12]. ஒவ்வொரு நிலத்திற்கும் வழிபடு தெய்வம் வெவ்வேறாக இருந்தாலும் நடுகல் எனப்படும் முன்னோர் வழிபாட்டையும் அதன் வழியாக முன்னெடுக்கப்படும் சடங்குகளையும் இவ்வாய்வின் வழி அறியமுடிகிறது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Povas., G. D. (1980). *Kalai Kaḷañciyam Volume – 4 [Encyclopedia Vol-4]*. Chennai: Thamizh Publishers.
2. Vaiyapuri Pillai., S. (1982). *Tamil Lexicon Volume – 6*. Chennai: University of Madras.
3. Thirumoolar. (2006). *Thirumanthiram [Thirumanthiram]*. Chennai: Varthamanan Publication.
4. Thiruvalluvar. (1984). *Thirukkural [Thirukural]*. Chidambaram: Thendral Nilayam.
5. Subramanian. Sa. Ve. (2014), *Sanga Illakiyam Mulamum Uraiyum* [*Source and Text of Old Tamil Literature*] Chennai: Manivasagar Publishers.
6. Tholkapiyar. (1942), *Tholkapiyam [Tholkapiyam]*. Chennai: Saiva Siththanda Publications.
7. Thiruganasampantham., S. (2010), *Puraporul Venbamalai [Pura porul Venba Malai]*. Tiruvaiyāṟu: Kathir Publishers.
8. Manonmani., T. (2013). *Tholliyal [Archeology]*. Chennai: Pavai Publications.
9. Ponniah, K., & Thamburaj, K. P. (2017). Chinese Community's Involvement in Thaipusam celebration at Sungai Petani Sri Subramaniya Swami Devasthanam. *Man in India, 97*(24), 17-27.
10. Swayam Bagaria. (2021), Ritual Disintermediations: Tradition and Transformation of Sati Worship, *The Journal of Objects, Art and Belief*, Volume 17, 2021 - Issue 3, Pages 381-404.
11. Agilan, D. K., & Varatharajan, V. (2021). Centūl Kāḷiyam'maṉ vaḻipāṭu [Worship of Sentul Kaaliamman]. *Muallim Journal of Social Sciences and Humanities, 5*(2), 165-175. https://doi.org/10.33306/mjssh/13
12. Kinnunen, M., Honkanen, A. and Luonila, M. (2021), "Frequent music festival attendance: festival fandom and career development", International Journal of Event and Festival Management, Vol. 12 No. 2, pp. 128-147. https://doi.org/10.1108/IJEFM-08-2020-0050.